**கஹவத்த பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கஹவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் பொதுச் சந்தைக்கு மின்சார தொடர்பு பெற்றுக்கொள்ளல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த மூலதனச் செலவு ஆகிய ரூபா 376,737 தொகை மின்சார பில் கட்டுதல் வருமானச் செலவிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் செயற்பாட்டு மிகை மேற்கூறிய பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 160,510 இற்கான வீதவரி முன்னைய ஆண்டின் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பிரதான பேரேடு மற்றும் பதிவேடுகள் இடையே மீதிகளை சமப்படுத்துவதற்காக நாட்குறிப்பு இலக்கம் 13 இன் மூலம் நீர்க் கட்டணக் கணக்கு மற்றும் கடை வாடகைக் கணக்கு முறையே ரூபா 11,611 தொகை மற்றும் ரூபா 77,615 தொகையாக பதிவேடுகள் மற்றும் கணக்குகளிடையே காணப்பட்ட வித்தியாசங்களை இனங்காணாமல் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் மக்கள் வங்கியில் பேணப்பட்டிருந்த 02 வங்கிக் கணக்குகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களை வெவ்வேறாக கணித்த போது ரூபா 143,957 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான வருமானம், நிதிக் கூற்றுக்களின் படி மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 1,506,224 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 92,564,931 தொகை பெறுமதியுடைய நிலையான சொத்துக்களின் பெறுமதி ஆக்கப்பட்ட முறைமையை காட்டும் விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 101 முதல் 110 வரை | 2013 ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு சொந்தமாக இருந்த இலக்கம் 46-4075 கொண்ட டெய்லர் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் எடுக்க வேண்டிய எதுவித நடவடிக்கையும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 13 திகதி வரை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2) | 2006 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை ரூபா 126,149 இற்கான முற்பணங்களை கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 13 திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஒரு குறிப்பிட்ட கருமத்திற்கான துணைக் கட்டுநிதி ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 20,000 இனை மிகைக்கக் கூடாது எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக அப் பெறுமதியினை மிகைத்து 02 சந்தர்ப்பங்களில் ரூபா 87,500 இற்கான முற்பணங்கள் வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iv) நிதிப் பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்ய வேண்டுமெனினும், 2000 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 851,970 தொகை பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக மேற்கூறிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 மே 29 ஆந் திகதிய இலக்கம் 03/2012 கொண்ட சுற்றறிக்கை

06 ஆம் பிரிவு

மந்திரிமாருக்கான எரிபொருள் படி செலுத்தும் போது முதலில் முற்பணம் வழங்கி பின்னர் அதனை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும் எனினும், சமர்ப்பிக்கப்படும் பில்பத்திரங்களுக்காக அல்லது பில்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாமல் சபைக் கூட்டங்களுக்காக வந்த நாட்களுக்காக மந்திரிமார் படியுடன் சேர்த்து எரிபொருள் படியும் செலுத்துப்பட்டிருந்தது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,277,750 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,005,085 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 727,335 தொகையினால் குறைந்திருந்ததுடன், அவை 24 சதவீதம் குறைவடைதல் ஒன்றென அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவுகளில் அதிகரிப்பு மற்றும் மீண்டுவரும் வருமானத்தில் குறைவடைதலும் முக்கியமாக பாதித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 3,352 | 3,302 | 3,213 |
| வாடகை | 7,766 | 3,021 | 617 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 194 | 118 | - |
| ஏனைய வருமானங்கள் | 34,749 | 31,034 | 9,663 |

**2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரி மற்றும் வரி, வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைக்கான கட்டணம், எழுத்தாணையும் தண்டமும், ஏனைய வருமானங்கள் முறையே 19 சதவீதம் முதல் 64 சதவீதம் வரை பாரிய அளவில் குறைவடைதல் ஒன்றினை காட்டியது.

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது மொத்த மதிப்பீட்டு வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது முறையே 0.94 சதவீதம், 0.27 சதவீதம், 48 சதவீதம் ஆக குறைவடைதல் ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீட்டு வருமானத்தை விட 48 சதவீதத்தினால் பாரிய குறைவடைதல் ஒன்றினை காட்டியது.

**2.3.3 வீத வரி**

கணக்காய்வு திகதியாகிய 2015 நவம்பர் 11 திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான வீதவரி சேகரித்தல் செயலாற்றுகை நிலுவையில் 26 சதவீதம் மற்றும் பாதீட்டு பெறுமதியில் 37 சதவீதம் ஆக மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபையின் அதிகாரப் பிரதேசதில் காணப்படும் வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வியாபாரங்களின் வகைகள் படி மற்றும் கைத்தொழில்களின் பிரகாரம் பதிவேடு ஒன்று தயாரிக்கப்படாமல் ஒவ்வொரு நாளும் அறவிடப்படும் மேற்கூறிய வரியை மாத்திரம் ஆவணப்படுத்தல் நடைபெற்றுள்ளது.

**2.3.5 ஏனைய வருமானங்கள்**

(அ) அறிவித்தல் பலகைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தியிருக்காததுடன், பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் நிரந்தர மற்றும் தற்காலிக அறிவித்தல் பலகைகளின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியாகவிருந்த பாரிய வருமானமொன்றினை இழந்திருந்தது.

(ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சந்தை கடைகளின் வாடகை ஒவ்வொன்றையும் வெவ்வேறாக பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக பிரதேச சபையின் பொதுச் சந்தை கடைகளுக்கு Key Money (பணம் முன்னர் செலுத்தும் முறை) என மேல் மாடியில் உள்ள ஒரு கடை ரூபா 400,000 தொகைக்கும், கீழ் மாடியிலுள்ள கடையொன்று ரூபா 500,000 தொகைக்கும் ஆக 2013 ஆகஸ்ட் 29 திகதி பொதுக் கூட்டத்தினால் தீர்மானித்திருந்ததுடன் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 11 திகதி வரை அவ்வாறு வழங்கியிருந்த 06 கடைகள் தொடர்பாக ரூபா 2,065,000 தொகை முன்கொடுப்பனவுத் தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

2015 பெப்ரவரி மாதத்தின் பின்னர் நீதிமன்றத் தண்டப் பண வருமானம் மற்றும் 2014 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் இரத்தினபுரி மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து முத்திரைக் கட்டணத்தைப் போலவே 2015 மார்ச் மாதத்தின் பின்னர் எம்பிலிபிட்டிய மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டு இறுதி வரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்தாமை அல்லது பதிவேடுகள் பேணப்பட்டமையால் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 11,009,360 இற்கான கடன்கொடுத்தோர் மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், கடனைத் தீர்ப்பதற்கு அல்லது பதிவேடுகளை சரிசெய்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 11 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 13 வாகனங்களின் தேக்கம் ஒன்றிற்காக சபையில் 04 சாரதிகள் மாத்திரம் இருந்ததுடன் அதன் காரணமாக பல வாகனங்களின் பொறுப்பினை ஒரு உத்தியோகத்தருக்கு சாட்டுவதற்கு நேரிட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) நீதிமன்றத்தின் பொறுப்பிற்கு எடுக்கப்பட்டிருந்த பிரதேச சபை தலைவரினால் பயன்படுத்தப்பட்ட பதிவிலக்கம் PF – 5499 கொண்ட கப் வண்டியை விடுவிப்பதற்காக 2015 பெப்ரவரி 09 திகதி ரூபா 10,000 தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும் அக் கொடுப்பனவை தலைவரிடம் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2014 மே 11 திகதி கிடைத்திருந்த 4WD Diesel NISSAN NAVARA LE இலக்ககம் PE – 5499 கொண்ட டபள் கப் வண்டி 2014 அக்தோபர் 02 மற்றும் 2015 ஜுலை 27 திகதிகளில் விபத்துக்குள்ளாகிய இருந்த போதிலும் அது தொடர்பான ஆவணங்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், 2015 ஆகஸ்ட் 08 ஆந் திகதி நீதிமன்ற செயற்பாடொன்றிற்காக பொலிஸ் தடுப்புக் காவலுக்கு எடுக்கப்பட்டிருந்தது. 2014 மே 11 சபைக்குக் கிடைத்திருந்த ஐந்து மில்லியனை விட கூடிய பெறுமதி உடைய மேற்கூறிய வாகனம் ஒன்றறரை வருட காலப்பகுதியில் கவனக் குறைவுடன் ஓட்டுதல் மற்றும் கவனயீனம் காரணமாக சபை நிதியத்திற்கு தேவையற்ற செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

**3.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

குப்பை முகாமைத்துவம் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தியிருக்காததுடன் நகரத்தில் சேகரமாகும் குப்பைகளை ஹவுபெவத்த பிரதேசத்தில் திறந்த தரை பிரதேசத்தில் கிடங்குகள் தோண்டி உக்கக் கூடிய உக்காதவை அனைத்தையும் புதைத்தல் தற்போதும் செயற்படுகின்றது என

அவதானிக்கப்பட்டது. குப்பைகளை அகற்றுவதற்காக கிடங்குகள் வெட்டுவதற்காக பெக்கோ இயந்திரத்திற்காக ரூபா 101,890 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து கிடைத்திருந்த WP LL – 6964 கொண்ட பொடோன் டம்ப் டிரக் வண்டி தற்போது சபைவளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் நிரந்தர சாரதி ஒருவர் இன்றி அதிகமான காப்புறுதி மற்றும் ஏனைய செலவுகள் மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டது. இந்த சபைக்கு தேவையான அளவை விட பாரிய அளவிலான ஒன்றாகக் காணப்படல் மற்றும் குப்பைகளை எடுத்துச் செல்வதற்கு அல்லது வேறு ஏதும் விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கு முடியாதிருந்ததாகவும், வருமானம் ஈட்டக் கூடிய சந்தர்ப்பமொன்றாக பயன்படுத்துவதற்கு பயன்படுத்தப்படாமல் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 13 திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது.

#### (ஆ) தனதாக்கப்படாத சொத்துக்கள் முறைசாரா விதமாக உபயோகித்தல்

(i) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபைக்குச் சொந்தமான 22 ஏக்கர் 03 ரூட் 31 பர்சஸ் அளவினைக் கொண்ட 25 மயானங்கள் காணப்படுவதாக இனங்கண்டிருந்த போதிலும், அந்த மயானங்கள் தொடர்பாக காணி உறுதிகளும் வரைபுகளும் சபையில் காணப்படவில்லை. மேற்குறிப்பிட்ட மயானங்களில் 2 மயானங்களுக்கான அளவைக் கட்டணமாக ரூபா 34,520 தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும் அளவை விடயங்களை பூர்த்தி செய்து மயானத்தை சபைக்கு உரித்தாக்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான 21 விளையாட்டுத் திடல்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 02 விளையாட்டுத் திடல்கள் மாத்திரமே ஆவணப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் முன்பள்ளி ஒன்று நடத்தப்பட்ட போதிலும் காணியின் உரிமை தொடர்பாகவும் மேற்கூறிய விளையாட்டுத் திடல் தொடர்பாகவும் காணி உறுதிகள் போலவே வரைபுகளும் சபையில் காணப்படவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு தேவையான வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்